## TAMILNADU POLLUTION CONTROL BOARD

**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE ENVIRONMENTAL CLEARANCE FROM MINISTRY OF ENVIRONMENT, FOREST & CLIMATE CHANGE BY KODANGIPALAYAM CLUSTER – A FOR THE PROPOSED QUARRY PROJECT OF 19.08.50 HECTARE LOCATED AT S.F. NOS. 117/1(P), 117/2(P), 154/2C, 158/2K, 122/1A, 158/2I, 124/1, 124/2, 158/2A, 102/1, 114/2C, 2D, 2E1, 2E2, 2F AND 2G1, 166/2D(P), 117/3(P), 4(P), 9A, 10A, 10B(P), 11A, 11B(P), 12(P), 89/2A AND 89/3, KODANGIPALAYAM VILLAGE, PALLADAM TALUK, TIRUPPUR DISTRICT, HELD ON 17.02.2021 FROM 11.15 AM to 12.00 PM IN SRI VENKATESHWARA MAHAL, TRICHY MAIN ROAD, KARANAMPET, PALLADAM TALUK, TIRUPPUR DISTRICT.**

**Present:**

| | | |
|---|---|---|
| 1 | Dr. K. Vijayakarthikeyan, I.A.S. | District Collector,<br>Tiruppur District,<br>Tiruppur |
| 2 | Er. V. Swaminathan | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruppur South |
| 3 | Er. C. Vanaja | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruppur South |
| 4 | Dr. S. Vediappan | Deputy Director,<br>Geology & Mining,<br>Tiruppur District |
| 5 | Project Proponents (11 Nos.) | Annexure - I enclosed |
| 6 | Thiru. D. Thangaraj | EIA Consultant,<br>Geo Exploration and Mining Solution,<br>Salem. |
| 7 | Public | 56 Nos. (Annexure - II enclosed) |

It was proposed to conduct public hearing for the proposed Kodangipalayam Cluster – A consisting of SF. No. 117/1(P), 117/2(P), 154/2C, 158/2K, 122/1A, 158/2I, 124/1, 124/2, 158/2A, 102/1, 114/2C, 2D, 2E1, 2E2, 2F AND 2G1, 166/2D(P), 117/3(P), 4(P), 9A, 10A, 10B(P), 11A, 11B(P), 12(P), 89/2A AND 89/3, Kodangipalayam village, Palladam Taluk, Tiruppur District to an

extent of 19.08.50 Ha on 12.02.2021. Due to administrative reasons, the proposed public hearing was postponed to 17.02.2021 by the District collector, Tiruppur which was widely advertised in the local daily (a copy of the press release dated 12.02.2021 is enclosed vide annexure – III). A display board was also placed before the said hall (Sri Venkateshwa Mahal, Palladam Road, Karanampet, Palladam Taluk, Tiruppur District) about the postponement of the public Hearing (annexure – IV enclosed).

**The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruppur South.**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruppur South has welcomed the District Collector, Tiruppur, General Public, Environmentalist and other Government Officials in the public hearing meeting conducted on 17.02.2021 for the proposed cluster quarry project M/s. Kodangipalayam Cluster - A, over an extent of 19.08.50 ha, Kodangipalayam Village, Palladam Taluk, Tiruppur District. He also said that the public hearing is to be conducted for the establishment of certain industries attracting the EIA notification, 2006 as amended, issued under the Environment (Protection) Act, 1986. He has also requested the public present in the meeting to air their views regarding their opinion, doubts, apprehensions and suggestions about the proposed new project.

Further, the District Environmental Engineer, Tiruppur South has stated that Thiru. D. Thangaraj, EIA Consultant, Geo Exploration and Mining Solution, Salem will explain about the proposed project and Environmental Impact Assessment report through power point presentation and followed with the public can express their views, suggestions and comments on the said project and also he stated that the queries of the public's will be clarified by the project proponent.

Accordingly Thiru. D. Thangaraj, EIA Consultant, Geo Exploration and Mining Solution, Salem welcomed the District Collector, District Environmental Engineer, District Officials, Public and briefed about the proposed 11 Nos. of quarries and existing 15 Nos. of quarries in the M/s. Kodangipalayam Cluster - A project by the power point presentation. After his explanation, District

Environmental Engineer invited comments from the public through written or oral.

Accordingly, the following village people have raised some comments in the public hearing meeting. The views and suggestions of the public are detailed as below.

**PUBLIC VIEWS:**

**1. Thiru. V. Palanisamy, President – Kodangipalayam Village Panchayat.**

He, the president of Kodangipalayam village extended his warm welcome to the District Collector, Tiruppur, District officials, all public and the project proponents of M/s. Kodangipalayam Cluster – A. He wished to record his comments about the M/s. Kodangipalayam Cluster – A. as below.

- The rough stone quarry and gravel quarries are fetching good income in Kodangipalayam panchayat.
- These quarries have fetched in Rs. 2 crores as revenue for Kodangipalayam Panchayat.
- For the construction of community welfare centre, primary health centre an amount of Rs. 50 Lakhs has been sanctioned from District Mineral fund. Further for the drinking water issues, building and road facility are being facilitated from the District Mineral fund and for their constructive work and for Panchayat revenue these quarries are contributing.
- Not only for revenue, but also for Panchayat social welfare works, many constructive works done specifically tree plantations in six villages are being carried out from the quarry proponents, Sangothipalayam 'Mahilvanam', Karanampettai 'Muthamil Vanam', 'Raja Vanam' of Rasagoundanpalayam and unnamed forestry formations are being funded by the quarry proponents.
- Basic needs of public and all other issues like road are being funded by the quarry proponents even when Panchayat do not have funds. Many social clubs by youth are contributed by the quarry proponents to carry out works.
- The quarry proponents are ready to assist physically disabled and for public issue immediately. With such assistance constructive works are able to be completed.

- Revenue not only for Panchayat but also for government are from quarry business and construction activities in their Panchayat, Coimbatore, Tiruppur is possible only because of these quarries in a easy and simple manner.
- Earlier for sand they need to go to the River Cauvery, which is costly also. At present locally available M-sand/P-sand production at low cost for construction, Panchayat work is available and for state, country's developmental works. Like Agriculture, Power looms and Textiles these quarries are located in our Panchayat and Ichipatti Panchayat which facilitate presidents of these panchayat to help public. These quarries and allied crusher, mechanic works are carried in their area besides employment is only due to successful functioning of these quarries and constructive activities are carried out in these two local Panchayat.
- Public, local panchayat and quarry association are solving petty problems among themselves.
- Earlier there were some small issues. As advisor stated, noise level has come down by adopting latest technologies and for dust abetment trees are planted by the quarry proponents. Further 20 acres of land has been selected by them and quarry proponents has assured to help for tree plantation in the land.
- When the quarry/crusher units approached him for tree saplings, he has arranged with the help of Vanam India Foundation and youth welfare clubs.
- Tree plants were even fetched from Theni and environmental enhancement works are being carried out and to carry further.
- Any business has its own petty problems. These issues were sorted out in a constructive manner and dust emission in each units are being mitigated.
- Further assured to carry more works by the Panchayat with the guidance of District Collector and ready to carry out more works.
- More revenue is generated for panchayat and government by the proposed 11 Nos. of quarries and on renewal of existing 16 quarries and these quarries are assisting Panchayat, Rulers, government or even District Collector including panchayat presidents to fulfill the peoples good aspirations and the quarry business helps in a constructive manner.

**2. Thiru. K. Kanagaraj - 10th Ward Councilor – Kodangipalayam Village.**

He, the Ward Councilor of Kodangipalayam village extended his warm welcome to the District Collector, Tiruppur, District officials, all public and the project proponents of M/s. Kodangipalayam Cluster – A. in his speech he said the following.

- Both public and Quarry Association are carrying these quarry works as a family and no disputes among them.
- As president stated, Quarry Owners Association and office bearers assisting various works like tree plantation, supply of sand and jelly to school building and on small accidents arising at times sorting issues jointly with panchayat, quarry owners association and public.
- On behalf of public and panchayat union, it is required to issue Identity Card for employees of these quarries by both quarry owner association and district administration since 70% of the work force is from other states.
- Since the drivers are from northern states, small issues arise due to lack of communication.
- For and behalf of Panchayat union and Panchayat thanked for water spraying arrangements to mitigate dust due to lorry operations.

**3. Thiru. Boopathy – Secretary – Tiruppur Power loom Association.**

He welcomed the District collector and the gathering and said the following.

- In this area thousands of medium scale power looms are located with low investments and these existing and proposed quarries will reduce the price and hence we are welcoming
- These quarries are boon to their economy and small entrepreneurs will further enhance their business.
- Being treasurer to Mahil Vanam Botanical Park in Kodangipalayam panchayat, last year with Quarry Owners Association ten thousand trees were planted by them. In this year they will plant 20,000 trees.
- Requested to allocate certain funds exclusively for tree plantation from District Mineral Fund to the Panchayat.

**4. Thiru. N. Sivakumar, Member of 6th Ward – Kodangipalayam Village.**

He welcomed the District collector and the gathering and said the following.

- More Quarries are located in this area and hence rural area has been enhanced with more Revenue by these quarry business in this area. Revenue at District level is increased due to these quarry business.
- Considerable public from other places are staying here and involved in the quarry business. The per capita income is increased and hence these area public are benefitted.
- Because of these quarries this area people are able to buy construction material at low cost. These businesses are in a manner to enhance rural area development.

**5. Thiru. R. Subramanian – The former President - Kodangipalayam Village Panchayat.**

He welcomed the District collector and the gathering and said the following.

- Like textile business in Coimbatore which is called as Manchester of South India and Kodangipalayam is with stone quarry & Crushers business
- Quarry Owners are giving helping hand to them whenever approached for assistance to them
- Helping to reduce the construction material cost which are available to poor people of this area at low cost
- These quarry business shall flourish and no problems by these quarries.
- The president of quarry owner association along with public are easily sorting their small disturbances whenever arises.

**6. Thiru. S. Selvaraj – Public - Kodangipalayam Village**

He welcomed the District collector and the gathering and said the following.

- PAP canal project is located only from Palladam to Pongalur area and hence their area is deprived of water and hence no other business is carried out. For the past 50-60 years quarry business is functioning.
- To best of his knowledge these are blue metal jelly are hard and strong and not available in other parts of Coimbatore and Tiruppur Districts. These quarries located in this area is a boon.
- For the Village School, Temple and public functions the contribution from quarry owners are excellent. Though Government has allotted Rs.50 Lakhs

to the estimated cost of Rs.70 Lakh for the Karanampettai High School renovation, these quarry owners have donated material like earth, stone and jelly worth of Rs.20 Lakhs at free of cost. Hence very good High School has been established.

- During Covid-19 pandemic for each house they gave 5 Kg of rice and though small mistakes exist with them they are sorting it when approached.

- Earlier during blasting stones flew with dust like problems were there. Now with the good technology these problems are not. However it is better to reduce dust pollution further.

On behalf of the District collector, Tiruppur and Tamilnadu Pollution Control Board, the District Environmental Engineer, thanked all the public who have participated in this meeting

The proceedings of the meeting were video graphed and recorded in CD which is enclosed.

District Environmental Engineer
TNPC Board, Tiruppur South

District collector
Tiruppur

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**17.02.2021 அன்று காலை 11.15 மணி முதல் 12.00 மணி வரை, திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், காரணம்பேட்டை, திருச்சி பிரதான சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா மஹாலில், நடைபெற்ற தி/ள் கோடாங்கிபாளையம் குழுமம் - A நிறுவனத்தின் உத்தேசிக்கப்பட்ட குவாரிகள் (புல எண் 117/1(P), 117/2(P), 154/2C, 158/2K, 122/1A, 158/2I, 124/1, 124/2, 158/2A, 102/1, 114/2C, 2D, 2E1, 2E2, 2F and 2G1, 166/2D(P), 117/3(P), 4(P), 9A, 10A, 10B(P), 11A, 11B(P), 12(P), 89/2A மற்றும் 89/3 பரப்பு 19.08.50 ஹெக்டர், கோடங்கியாளையம் கிராமம், பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம்) திட்டத்திற்கான பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.**

பங்கேற்றோர்

| | | |
|---|---|---|
| 1. | டாக்டர். கே. விஜயகார்த்திகேயன்<br>இந்திய ஆட்சிப் பணி. | மாவட்ட ஆட்சியர்,<br>திருப்பூர் மாவட்டம், திருப்பூர். |
| 2. | திரு. வ. சுவாமிநாதன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பூர் தெற்கு, பல்லடம், |
| 4. | திருமதி. செ. வனஜா | உதவி சுற்றுச்சுழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பூர் தெற்கு, பல்லடம், |
| 5. | டாக்டர் எஸ். வெடியப்பன் | துணை இயக்குனர், புவியியல் மற்றும் சுரங்க துறை, திருப்பூர் மாவட்டம். |
| 6. | திட்ட உரிமையாளர்கள் - (11 Nos.) | இணைப்பு - I ல் உள்ளபடி |
| 7. | திரு. தங்கராஜ் | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர்,<br>புவி ஆய்வு மற்றும் சுரங்க தீர்வு, சேலம் மாவட்டம். |
| 8. | பொது மக்கள் | 56 Nos. (இணைப்பு - II ல் உள்ளபடி) |

கோடங்கிபாளையம் குழுமம் - A குவாரிக்களுக்கான (புல எண். 117/1(P), 117/2(P), 154/2C, 158/2K, 122/1A, 158/2I, 124/1, 124/2, 158/2A, 102/1, 114/2C, 2D, 2E1, 2E2, 2F and 2G1, 166/2D(P), 117/3(P), 4(P), 9A, 10A, 10B(P), 11A, 11B(P),

12(P), 89/2A மற்றும் 89/3, பரப்பு 19.08.50 ஹெக்டர், கோடங்கிபாளையம் கிராமம், பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம்) பொது மக்களின் கருத்துக்கேட்பு கூட்டம் முன்பே அறிவித்தப்படி 12.02.2021 அன்று நடைபெறுவதாக இருந்தது, சில நிர்வாக காரணங்களால், இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர், திருப்பூர், அவர்களால் ஒத்திவைக்கப்பட்டது. இந்த தகவல் உள்ளூர் நாளிதழிலும் அறிவிக்கப்பட்டது (12.02.2021 அன்று வெளிவந்த பத்திரிக்கை செய்தியின் நகல் இணைப்பு - III –ல் இணைக்கப்பட்டுள்ளது). மேலும் ஒத்திவைப்பு அறிவிப்பு குறித்த பதாகையும் ஏற்கனவே கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த கூட்ட அரங்கிற்கு முன்பாக (ஸ்ரீ வெங்கடேஷ்வரா மஹால், காரணம்பேட்டை, பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம்) வைக்கப்பட்டது (நகல் இணைப்பு - IV - ல் இணைக்கப்பட்டுள்ளது ).

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர் தெற்கு**

கூட்டத்தின் துவக்கத்தில், மாவட்ட சுற்றுச்சுழல் பொறியாளர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பூர் (தெற்கு) அவர்கள், கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்த மாவட்ட ஆட்சியர் திருப்பூர், அரசு அதிகாரிகள், நிறுவனத்தின் பிரதிநிதிகள், சுற்றுச்சுழல் ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்களை வரவேற்றார். பின்னர் அவர் 2006 சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின் கீழ் குறிப்பிட்ட சில தொழில் நிறுவனங்கள் துவக்க பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்பட வேண்டும் எனக் கூறினார்.

திட்டத்திற்கான விளக்க உரையை திரு. பெ. தங்கராஜ், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர், புவி ஆய்வு மற்றும் சுரங்க தீர்வு, சேலம் மாவட்டம் அவர்கள் விளக்கிய பின்பு பொது மக்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பார்வை, கருத்து, சந்தேகங்கள், பாராட்டுக்கள் மற்றும் யோசனைகளை பொதுமக்கள் இக்கூட்டத்தில் பதிவு செய்யலாம் என்று கூறினார்.

1. **திரு. V. பழனிசாமி – ஊராட்சி மன்ற தலைவர் - கோடங்கிபாளையம் கிராமம்.**

இவர், பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்து தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் மாவட்ட

சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் அனைத்து பொது மக்களுக்கும் தன்னுடைய முதற்கண் வணக்கங்களை தெரிவித்துக் கொண்டு தனது கருத்துக்களை கீழ்கண்டவாறு பதிவுசெய்தார்.

- கல்குவாரி மற்றும் மண் குவாரிகள் கோடங்கிபாளையம் ஊராட்சியில் அதிக வருவாய் ஈட்டித் தருகின்ற தொழிலாக இருக்கிறது என்பதை தான் ஆணித்தனமாக பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன் என்று கூறினார்.
- இந்த குவாரிகள் மூலமாக கடந்த ஓராண்டில் மட்டும் 2 கோடி ரூபாய் அளவிற்கு கோடங்கிபாளையம் ஊராட்சிக்கு வருமானம் பெறப்பட்டிருக்கிறது என்றும் கூறினார்.
- மாவட்ட ஆட்சித்தலைவரின் மாவட்ட கனிமவள நிதியிலிருந்து ரூபாய் 50 லட்சம் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கும், துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது எனவும், மேலும் ஊராட்சியினுடைய அடிப்படை திட்ட தேவைகளான குடிநீர் பிரச்சனை, கட்டிட வசதி, சாலை வசதிகள் போன்றவை இந்த கனிமவள நிதியின் மூலமாக பொதுமக்களுக்கு செய்து கொண்டிருக்கிறோம் எனவும், இது ஒரு ஆக்கப்பூர்வமான பணியாக, ஊராட்சிக்கு மிகப் பெரிய வருவாய் தரக்கூடிய ஒரு இனமாக இந்த குவாரி தொழில் நடைபெற்று வந்து கொண்டிருக்கிறது எனவும் கூறினார்.
- இந்த கல் குவாரி பொருத்தமட்டில் வருவாய் ஈட்டுவது மட்டுமின்றி தங்கள் ஊராட்சியில் சமுதாய நலப்பணிகளும், பல ஆக்கப்பூர்வமான பணிகளும் செய்து வருகிறார்கள் எனவும், குறிப்பாக ஆறு குக்கிராமங்களில் மரம் நடும் பணிக்காக பல லட்சக்கணக்கான ரூபாய்கள் குவாரி உரிமையாளர்களிடமிருந்து பெற்றுதான் மரம் வளர்ப்பு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது எனவும், சங்கோதிபாளையத்தில் மகிழ்வனம், காரணம்பேட்டையில் முத்தமிழ் வனம், மேற்கு இராசக்கவுண்டன் பாளையத்தில் ராஜ வனம், மற்ற ஊர்களில் பெயரிடப்படாத வனங்கள் போன்றவையும் இவர்களுடைய ஆக்கப்பூர்வமான நிதிகளின் மூலம்தான் இந்த பணிகளை தாங்கள் முன்னெடுத்துவந்துகொண்டிருக்கிறோம் எனவும் கூறினார்.
- மக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் எந்த பிரச்சனையாக இருந்தாலும் அதாவது சாலை வசதி போன்றவைக்கு ஊராட்சியில் நிதி இல்லாமல் இருக்கும் சமயத்திலும் இவர்களிடம் கேட்கும் போது தருகிறார்கள் எனவும்,

தங்கள் ஊராட்சியில் நிறைய இளைஞர் நற்பணி மன்றங்கள் செயல்படுகிறது எனவும், அவர்கள் செய்யக்கூடிய பணிகளுக்கும் குவாரி உரிமையாளர்கள் மூலமாகத்தான் நிதிகளைபெற்று பணிகளை செவ்வனே ஆற்றி வருகிறோம் என்பதை ஆணித்தனமாக பதிவு செய்துகொள்கிறேன் எனவும் கூறினார்.

- மக்களுடைய பிரச்சனைகள், மாற்றுதிறனாளிகளுக்கு உதவ வேண்டுமென்று சொன்னாலும் குவாரி உரிமையாளர்களிடம் கேட்டால் அதை உடனடியாக செய்து தருவதற்கு தயாராக இருக்கிறார்கள் எனவும், செய்துகொண்டும் வருகிறார்கள் எனவும், அதன் மூலமாகதான் தன்னை போன்ற ஊராட்சி மன்ற தலைவர்கள் எல்லாம் ஆக்கப்பூர்வமான பணிகளை இந்த ஊராட்சியில் ஆற்றி வர முடிகிறது என்று கூறினார்.
- ஊராட்சிக்கு மட்டுமல்லாது அரசுக்கும் வருவாய் ஈட்டித்தரக்கூடிய தொழிலாக இந்த குவாரி தொழில் இருக்கிறது எனவும், இந்த ஊராட்சி, கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டங்களில் நடக்கக்கூடிய கட்டுமான பணிகளுக்கும், சாலை மேம்பாட்டு பணிகளுக்கும் இது போன்ற குவாரிகள் இருப்பதால்தான் அந்த பணிகளை் எளிதாகவும், சுலபமாகவும் செய்துகொள்ள முடிகிறது என்று கூறினார்.
- முன்பெல்லாம் மணல் எடுக்க காவேரி ஆற்றிற்கு செல்ல வேண்டும். அது அதிகமான விலையாக இருந்தது, அது தற்போது உள்ளூரிலேயே எம்.சாண்டு/பி.சாண்டு உற்பத்தி நடப்பதால், அதுவும் குறைந்த விலையில் இங்கு இருக்கக்கூடிய மக்களுக்கும், கட்டுமான பணிகளுக்கும், ஊராட்சி வளர்ச்சி பணிகளுக்கும், மாநில மற்றும் நாட்டினுடைய வளர்ச்சிப் பணிகளுக்கும் மிக ஆக்கபூர்வமான தொழிலாக இருந்துவருகிறது எனவும், விவசாயம், விசைதறி, நெசவுத் தொழிலை போன்று இந்த குவாரி தொழிலானது எங்கள் ஊராட்சியிலும் மற்றும் அருகில் உள்ள இச்சிப்பட்டி ஊராட்சியிலும் உள்ளது. இந்த இரண்டு ஊராட்சிகளுக்கும் ஒரு ஆக்கப்பூர்வமாகவும், தங்களை போன்ற ஊராட்சி தலைவர்கள் மக்கள் கேட்பதை செய்து கொடுக்க இது போன்ற தொழில்கள் இருப்பதால்தான் எனவும், குவாரிகள் மட்டுமல்லாது குவாரி சார்ந்த கிராஷ்சர் தொழில், மெக்கானிக் தொழில் போன்றவை நடைபெறுகிறது எனவும், மேலும் நிறைய வேலை வாய்ப்புகளும் கிடைப்பது, இங்கு குவாரி தொழில் நல்ல முறையில் நடப்பதால்தான் என்று கூறினார்.

- சிறு சிறு பிரச்சனைகளை நடந்தாலும் கூட பொதுமக்களும், ஊராட்சி மன்றமும், கல் குவாரி சங்கமும் சேர்ந்து அந்த பிரச்சனைகளை தாங்கள் சரிசெய்து கொண்டு இருக்கிறோம் என்று கூறினார்.
- சிறு சிறு பிரச்சனைகள் முன்பெல்லாம் இருந்தது, ஆலோசகர் சொன்னது போன்று நவீன தொழில் நுட்பங்களை புகுத்துவதால் முன்பு இருந்த வெடி சத்தம் இப்போது இல்லாமல் குறைக்கப்பட்டுவிட்டது எனவும், மாசு குறைப்பதற்காக குவாரி உரிமையாளர்கள் நிறைய இடங்களில் மரங்களை வைத்திருக்கிறார்கள் எனவும், மேலும் மரங்கள் நடுவதற்காக ஏராத்தாழ 20 ஏக்கரை தாங்கள் தேர்வு செய்து வைத்திருப்பதாகவும் அதிலும் மரம் வளர்ப்பதற்கு குவாரி உரிமையாளர்கள் ஆவனம் செய்வதாக உறுதி கூறி இருக்கிறார்கள் எனவும் கூறினார்.
- ஒவ்வொரு கிரஷர் யூனிட் மற்றும் கல் குவாரிகளில் மேலும் நிறைய மரங்கள் வைக்க தன்னை நாடி மரக் கன்றுகள் கொடுங்கள் என்று கேட்பார்கள் எனவும், தானும் வனம் இந்தியா ஃபவுன்டேசன் மற்றும் இளைஞர் நற்பணி மன்றங்கள் சார்பாக ஏற்பாடு செய்து கொடுத்ததாகவும் கூறினார்.
- ஒரு முறை தேனி வரை சென்று மரக்கன்றுகளை எடுத்து வந்து மிக சிறப்பான முறையில் சுற்றுச் சூழல் மேம்பாட்டு பணிகள் செய்யப்பட்டு வருகிறது. அதை மென்மேலும் செய்வோம் எனவும் கூறினார்.
- எந்த தொழிலாக இருந்தாலும் சின்ன சின்ன பிரச்சனைகள் இருக்கத்தான் செய்கிறது. அதை எல்லாம் அவ்வப்போது சரிசெய்து மிக ஆக்கப்பூர்வமான முறையில் செய்து வருகிறோம் எனவும், புகை வருவதையும் கூட ஒவ்வொரு யூனிட்டிலும் கூரை அமைத்து சரிசெய்து கொண்டிருக்கிறார்கள் எனவும் கூறினார்.
- அதில் ஊராட்சி மன்றமும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் நடக்ககூடிய இந்த தொழிலை மேற்கொள்ளுவதற்கும் இன்னும் நிறைய பணிகளை செய்வதற்கும் தயாராக இருக்கிறோம் எனவும் கூறினார்.
- மேலும் பதினோறு குவாரிகள் வருவதனாலும் சரி, இருக்ககூடிய பதினாறு குவாரிகள் புதிப்பிக்கப்படுவதானாலும் சரி, ஊராட்சிக்கும், அரசுக்கும் மிக அதிக வருவாய் ஈட்டப்படுகிறது எனவும், பொது மக்களின் நல்ல எண்ணங்களை பெறுவதற்கு, ஆட்சியாளர்களானாலும் சரி, அரசானாலும் சரி, மாவட்ட ஆட்சியரானாலும் சரி, மற்றும் தன்னைபோன்ற ஊராட்சி மன்ற

தலைவர்களானாலும் சரி இந்த மாதிரியான குவாரி தொழில்கள் ஆக்கப்பூர்வமாக உதவி வருகிறது என்று கூறி முடித்தார்.

2. **திரு. K. கனகராஜ் - 10வாது வார்டு கவுன்சிலர் - கோடங்கிபாளையம் கிராமம்**

இவர் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த உயர்திரு. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், கல் குவாரி/கிரஷர் உரிமையாளர்கள், சங்க பொறுப்பாளர்கள், பொது மக்கள் மற்றும் துறை ரீதியான அதிகாரிகளுக்கும் தனது வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு கீழ்கண்டவாறு தனது கருத்துக்களை பதிவு செய்தார்.

- இங்கு பொது மக்களும், கல் குவாரி உரிமையாளர்கள் சங்கமும் ஒரு குடும்பமாக இணைந்து கல் குவாரி தொழில் செய்து வருவதாகவும், தங்களுக்குள் எந்த கருத்து வேறுபாடுகளும் இல்லை எனவும் கூறினார்.
- தங்கள் ஊராட்சி மன்ற தலைவர் கூறியது போல கல் குவாரி உரிமையாளர்கள் மற்றும் சங்க பொறுப்பாளர்கள் பல்வேறு வகையில் உதவி செய்து வருகிறார்கள் எனவும், வனம் அமைப்பதாகட்டும், கல்வி கட்டிடங்களுக்கு கல், மண் கொடுத்து உதவுவதாகட்டும், சிறு சிறு விபத்துக்கள் நடந்தால் உடனடியாக ஊராட்சி மன்றத்தோடு இணைந்து குவாரி உரிமையாளர்கள் சங்கமும், பொதுமக்களும் அந்த பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு வருகிறோம் என்று கூறினார்.
- பொது மக்கள் மற்றும் ஒன்றிய குழு சார்பாக ஒரு கோரிக்கை வைக்கிறேன் என்று கூறினார். இந்த தொழிலில் உள்ளர் மக்கள் 30 சதவீதமும், வடமாநில தொழிலாளர்கள் 70 சதவீதமும் பணிபுரிகிறார்கள், அவர்களுக்கு மாவட்ட நிர்வாகமும், கல் குவாரி உரிமையாளர் சங்கமும், இணைந்து அடையாள அட்டை வழங்க வேண்டும் என்று கூறினார்.
- ஏனென்றால் வடமாநில தொழிலாளர்கள் ஓட்டுனராக இருப்பதாலும் மற்றும் கடைகளுக்கு சென்று பொருட்கள் வாங்கும் போதும் மொழி புரியாத காரணத்தினாலும் சிறு சிறு பிரச்சனைகள் ஏற்படுகிறது என்று கூறினார்.
- லாரிகள் சென்று வரும் பாதையில் தண்ணீர் தெளித்து புகை வராத வண்ணம் லாரிகளை இயக்குகிறார்கள் எனவும் அதற்கு தங்களது ஒன்றிய குழு சார்பாகவும், ஊராட்சியின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றிகள் என்று கூறினார்.

- மாவட்ட அளவில் மற்றும் ஊராட்சி அளவில் முதல் மதிப்பெண் பெரும் ஏழை மாணவர்களை ஊக்குவித்து சிறப்பிக்க வேண்டுமென்று கூறி முடித்தார்.

3. **திரு. பூபதி – பொருளாளர் - திருப்பூர் மாவட்ட விசைத்தறி உரிமையாளர் சங்கம்.**

இவர் இந்த கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு வணக்கம் தெரிவித்துக் கொண்டு கீழ்கண்டவாறு தனது கருத்துக்களை பதிவு செய்தார்.

- இந்த பகுதியில் பல்லாயிரக்கணக்கான விசைத்தறி நெசவுக்கூடங்கள் இருக்கிறது, அனைவருமே அளவான நடுத்தர தொழில் செய்பவர்கள். தங்களுக்கு இப்பொழுது அமையப்பெற உள்ள மற்றும் ஏற்கனவே இருக்கும் கல்குவாரிகளினால், குறைந்த அளவு முதலீடு போட்டு செய்கின்ற எங்களைப்போன்ற தொழில் செய்பவர்களுக்கு விலைகள் குறைய வாய்ப்பிருப்பதால் இதை வரவேற்கிறோம் என்று கூறினார்.
- தங்களைப் போன்று குறுந்தொழில் செய்பவர்கள் மேலும் கூடுதலாக தொழிலை விரிவுபடுத்திச் செல்வதற்கு இந்த குவாரிகள் இங்கு அமையப் பெறுவது பொருளாதார ரீதியாக தங்களுக்கு வரப்பிரசாதமாகும் என்று கூறினார்.
- தான் மகிழ்வனத் தாவிரவியல் பூங்காவினுடைய பொருளாளர் என்ற முறையில் குறிப்பாக கோடங்கிபாளையம் ஊராட்சியில் கடந்த ஆண்டு மட்டும் ஊராட்சி வழிகாட்டுதலோடும், கல்குவாரி உரிமையாளர் சங்கத்தோடும் இணைந்து பத்தாயிரம் மரக்கன்றுகளை நட்டுயிருக்கிறோம் எனவும், வரும் ஆண்டில் இருபாதாயிரம் மரக்கன்றுகள் நடுவதற்கு அவர்களுடைய உதவியை கோரி இருக்கிறோம் எனவும். அந்த வகையில் இந்த ஆண்டு இருபதாயிரம் மரக்கன்றுகள் வைப்போம் என்றும் கூறினார்.
- கனிம வள வரிகளிலேயே மரங்களை நடுவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு நிதியை அரசே ஊராட்சிக்கு ஒதுக்கித்தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தனது கருத்தை கூறி முடித்தார்.

4. **திரு. N. சிவக்குமார் - 6வது வார்டு கவுன்சிலர் - கோடங்கிபாளையம் கிராமம்**

இவர் இந்த கூட்டத்திற்கு தலைமை ஏற்று வந்திருக்கும் மாவட்ட ஆட்சியர், மற்ற துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் பொது மக்களுக்கு வணக்கம் தெரிவித்துக் கொண்டு கீழ்கண்டவாறு தனது கருத்துக்களை பதிவு செய்தார்.

- இந்த பகுதியில் குவாரிகள் அதிகமாக உள்ளது, இதனால் கிராமப்புற மேம்பாடு சிறப்பாக உள்ளது எனவும், இந்த பகுதியில் அதிகமான வருமானம் ஈட்டிக்கொடுக்கின்ற தொழிலாக இந்த தொழில் உள்ளது எனவும், மாவட்ட அளவிலும் வருமானத்தை பெருக்க கூடிய தொழிலாக உள்ளது என்று கூறினார்.
- வெளி ஊரிலிருந்து அதிகமான மக்கள் இந்த பகுதியில் வந்து தங்கியிருந்து இந்த குவாரி தொழிலில் ஈடுபடுவதால் தனி நபர் வருமானம் அதிகரித்துள்ளது எனவும், மேலும் இந்த பகுதியில் வாழும் மக்களும் பயன்பட்டு வருகிறார்கள் என்றும் கூறினார்.
- இந்த பகுதியில் வாழும் மக்கள் குறைந்த விலையில் கட்டுமான பொருட்களை வாங்கும் வகையில் இக்குவாரி தொழில் உள்ளது எனவும், இந்த தொழில் கிராமபுறங்களை மேன்மெலும் வளர்த்தும் வகையில் உள்ளது என்றும் கூறி முடித்தார்.

**5. திரு. R. சுப்பிரமணியன் - முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் - கோடங்கிபாளையம் கிராமம்**

இவர் இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை தாங்கி வந்திருக்கக் கூடிய மாவட்ட ஆட்சித்தலைவர், துறை அதிகாரிகள், கல்குவாரி உரிமையாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு வணக்கம் தெரிவித்துக் கொண்டு கீழ்கண்டவாறு தனது கருத்துக்களை பதிவு செய்தார்.

- தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோயம்புத்தூரின் பஞ்சாலை தொழில் போன்று தமது கோடங்கிபாளையத்தில் இந்த கல் குவாரி மற்றும் கிரஷர் தொழில் அமைந்துள்ளது என்று கூறினார்.
- கல் குவாரி உரிமையாளர்கள் எல்லோரும் தமக்கு உதவிக் கரங்களாகவும் தாம் அனைவரும் அணுகும்போதெல்லாம் உதவி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார்.
- இந்த பகுதி ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் கட்டுமான பொருட்களை வழங்கி உதவி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறினார்.
- இந்த கல் குவாரி தொழில் மேன்மேலும் வளர வேண்டும் எனவும் கோடங்கிபாளையம் பஞ்சாயத்துக்கு இந்த தொழிலினால் எந்த ஒரு இடையூறும் இல்லை எனவும் கூறினார்.

- பொது மக்களுக்கு சிறு இடையூறுகள் வந்தாலும் பொது மக்களும் மற்றும் கல் குவாரி சங்கத் தலைவரும் சேர்ந்து எந்த ஒரு சிரமமும் இல்லாமல் தீர்வு கண்டு வருகிறார்கள் என்று கூறி முடித்தார்.

**6. திரு. S. செல்வராஜ் - பொது மக்கள் - கோடங்கிபாளையம் கிராமம்.**

இவர் பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள மாவட்ட ஆட்சிதலைவர், கனிமவள அதிகாரி, ஊர் பொதுமக்கள் மற்றும் குவாரி உரிமையாளர்களுக்கு வணக்கம் தெரிவித்துக் கொண்டு கீழ்கண்டவாறு தனது கருத்துக்களை பதிவு செய்தார்.

- பி.ஏ.பி வாய்க்கால் பல்லடத்தில் இருந்து பொங்கலூர் வழியாகச் சென்று விடுவதால் தங்களது பகுதியில் தண்ணீர் வசதி கிடைக்காத காரணத்தால் வேறு எந்த தொழிலும் செய்ய முடியாத சூழ்நிலையில் கடந்த 50-60 ஆண்டுகளாக குவாரி தொழில் இயங்கி வருகிறது என்று கூறினார்.
- தான் அறிந்த வகையில் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலேயே இந்த பகுதியில் உள்ளது போன்ற ஜல்லி கற்கள் வேறு எங்கும் கிடைப்பதில்லை எனவும், நல்ல கடினத் தன்மையுள்ள உறுதியான கற்களாக கிடைப்பதால் இந்த பகுதியில் கல் குவாரி இருப்பது மிகப் பெரிய வரப்பிரசாதம் என்றும் கூறினார்.
- இந்த ஊரில் உள்ள பள்ளிகள், கோவில்கள் மற்றும் பொது விஷேசங்களுக்கு குவாரி உரிமையாளர்களின் பங்களிப்பு மிக சிறப்பாக உள்ளது எனவும், காரணம்பேட்டை உயர்நிலைபள்ளி புதுபிக்க அரசு ஒதுக்கிய தொகை 50 லட்சமானாலும் புதுபிக்க ஆன செலவு சுமார் 70 லட்சம் ரூபாய் ஆனபோதிலும் கல் குவாரி உரிமையாளர்கள் தான் 20 லட்சத்திற்கு மண், கற்கள் மற்றும் ஜல்லி போன்ற பொருட்களை இலவசமாக வழங்கி உதவிய காரணத்தினால் தான் மிகச் சிறந்த ஒரு உயர் நிலைப்பள்ளி உருவாகி இருக்கிறது என்றும் கூறினார்.
- கோவிட்-19 காலகட்டத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் 5 கிலோ அரிசி கொடுத்தார்கள் எனவும், அவர்களிடமும் சிறு சிறு குறைபாடுகள் இருந்தாலும் அந்த குறைகளை அவர்களிடம் கூறும் போது சரி செய்து விடுகிறார்கள் என்று கூறினார்.
- முன்பெல்லாம் வெடி வைக்கும் போது கற்கள் பறப்பது, தூசு பறப்பது போன்ற பிரச்சனைகள் இருந்தது. இப்போது புதிய தொழில்நுட்பம் வந்த பின்பு அந்த

பிரச்சனைகள் இல்லை எனவும் மாசு மற்றும் இன்னும் குறைத்தால் நன்றாக இருக்கும் என்று கூறி முடித்தார்.

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்த பின், இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், மாவட்ட ஆட்சியர் மற்றும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் சார்பாக கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த பொதுமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டத்தை முடித்து வைத்தார்.

கூட்ட நிகழ்வை காணொலி காட்சியாக "பதிவு செய்யப்பட்டு" குறுந்தகட்டில் பதிவு செய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
திருப்பூர் தெற்கு

மாவட்ட ஆட்சியர்
திருப்பூர் மாவட்டம்

3/4